தனியாக மாநில அரசுகள் வசூலிக்கத் தேவையில்லை என்ற வகையில் ஒரு ஏற்பாட்டை மொத்தமாக தமிழக அரசு மத்திய சர்க்காரிடம் கேட்டு வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஆல் இந்தியா பெர்மிட் முறையில் எந்தவிதப் பிரச்சினையும் இல்லை. அதில் எப்போதுமே 140 ரூபாயை அந்தந்த மாநிலங்களிலேயே, ஆல் இந்தியா பெர்மிட் வழங்கி, வசூல் செய்து விடுவார்கள். அதில் மற்ற யாரும் வரி வசூல் செய்வது என்கிற பிரச்சினையே இல்லை. ஆனால், நாம் இப்போது பேசிக் கொண்டிருப்பது ஆம்னி பஸ்களைப் பற்றியும், மற்றும் ஸ்பேர் பஸ்களைப் பற்றியும்தான்.

சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் விடும் திட்டம்.

* வினா எண் 923—திரு. என். பழனிவேல்—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையிலிருந்து டெல்லிக்கு மேலும் ஒரு ரயில் சர்வீஸ் துவங்குமாறு மைய அரசிடம் நமது மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: (அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

திரு. என். பழனிவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமீப காலங்களிலே, சென்னையிலிருந்து டெல்லிக்கு மக்கள் அதிகமான அளவில் போய்க் கொண்டிருக்கிறார்கள். அப்படிப் போவதினால், ஒரு வாரம், இரண்டு வாரம் முன்னதாகக் கூட டிக்கெட் வாங்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, இந்தக் குறையை தவிர்க்கவும், டெல்லி-சென்னை போக்குவரத்துகளை இன்னும் அதிகப்படுத்தக் கூடிய முறையிலேயும்—இப்போது தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் டெல்லி செல்வதுபோல—மேலும் ஒரு ரயில் வண்டியை விடுவதற்கு அரசு ஆவன செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 9-50)

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: இதுபற்றி தென் மண்டல ரெயில்வே பொது மேலாளர் அவர்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் எழுதிக் கேட்டு, அப்படி எழுதிக் கேட்டதற்கு சென்னையிலிருந்து டெல்லிக்கு நான்கு

சர்வீஸ்களும், டெல்லியிலிருந்து சென்னைக்கு நான்கு சர்வீஸ்களும் இருக்கின்றன என்றும் இதற்கு மேல் விடுவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் காரணம் இருப்புப்பாதை தரம் போதுமானதாகயில்லை, எரிபொருள்கள், ரெயில் பெட்டிகள் போதுமான அளவிற்கு இல்லை என்றும் எனவே தற்போது அதைப்பற்றி நாங்கள் பரிசீலிக்க முடியாது என்றும் சொல்லி இருக்கிறார்கள்.

திரு. மி. வின்சென்ட்: 1979-ல் மத்திய ரெயில்வே அமைச்சர் அவர்கள் கன்னியாகுமரி-காஷ்மீர், நாகர்கோவில்-டெல்லி, நாகர்கோவில்-பாம்பே இவற்றிற்கு ரெயில் விடப்படும் என்று கன்னியாகுமரியில் அறிவித்தார்கள். ஆனால் வருடங்கள் இரண்டு ஆகியும் அமைதி காக்கப்படுகிறது, எனவே இது குறித்து மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: அப்படிப்பட்டதொரு அறிவிப்பை மத்திய அமைச்சர் அவர்கள் செய்திருப்பார்களேயானால் இன்றையதினம்கூட அதை ஞாபகமூட்டுகிற வகையில் மத்திய அரசுக்கு நாம் எழுதுவதில் எந்த விதமான தவறும் இருக்காது. அதை நாம் செய்யலாம்.

ஆத்தூரில் இருந்து தென்குமரை வரை பேருந்து விடும் திட்டம்

* வினா எண் 924—திருமதி தா. இராசாம்பாள் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தலைவாசல் தொகுதியில் ஆத்தூரிலிருந்து சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சார்வாய் வடகுமரை தென்குமரை வரை பேருந்து வழித்தடம் அனுமதித்திருந்தும் பேருந்துகள் எதுவும் செல்வதில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில் அந்த வழித் தடத்தில் பஸ்கள் விட அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. சு முத்துசாமி: (அ) & (ஆ) பஸ் உரிமையாளர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டு, தற்போது ஆத்தூர்-சார்வாய், வடகுமரை, தென்குமரை வழித்தடத்தில் பேருந்துகள் சார்வாய்புதூர் கிராமத்தின் வழியாக சரிவர ஓடிக்கொண்டிருக்கின்றன.

6 திருமதி தா. இராசாம்பாள் : அங்கே பள்ளிக்கூடத்தில் படிக்கும் மாணவர்கள் ஆத்தூர் சென்று வரவும், அங்குள்ள பெண்கள் பிரசவ காலத்தில் அவசரமாக ஆத்தூர் மருத்துவமனைக்கு வரவேண்டியிருப்பதாலும், அதோடு வியாபாரம் சம்பந்தமாக ஆத்தூர் வரவும் அங்கே அந்தப் பகுதி மக்களுக்கு பஸ் போக்குவரத்து வசதி இல்லை. தனியாருக்கு பர்மிட் வழங்கியும் அடிக்கடி பஸ்களை நிறுத்திவிடுவதால் அங்குள்ள மக்கள் மிகவும் பாதிக்கப்பட்